**இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

**உதவிப் பணிப்பாளர் / தகவல் தொழில்நுட்பம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

தகைமையுள்ள விண்ணப்பதாரரர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. தொழில் விபரம் மற்றும் பொறுப்புக்கள்

I. கணினி வலையமைப்பை உருவாக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்.

II. கணினி கட்டமைப்பை வடிவமைத்தல், கணினி நிறுவலை இயக்குதல் மற்றும் கணினி தரங்களை வரையறுத்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றின் மூலம் வலையமைப்பு சூழலை நிறுவுதல்.

III. பயர்வால்(**Firewall**) செயல்திறனைக் கண்காணிப்பதன் மூலம் வலையமைப்பு செயல்திறனை அதிகரித்தல், வலையமைப்பு சிக்கல்கள் மற்றும் செயலிழப்புகளை சரிசெய்தல், அட்டவணையின்படி புதுப்பித்தல், இணைப்புகள் மற்றும் மேம்படுத்தல்கள் மற்றும் வலையமைப்பு மேம்படுத்தலில் இணைய வடிவமைப்பாளர்களுடன் ஒத்துழைத்தல்.

IV. கொள்கைகளை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல், அணுகலை வரையறுத்தல் மற்றும் கண்காணிப்பதன் மூலம் பாதுகாப்பான வலைமைப்பை பேணுதல்.

V. வலையமைப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, திட்டமிட்டு செயல்படுத்துவதன் மூலம் தரவு, மென்பொருள் மற்றும் வன்பொருளைப் பாதுகாத்தல்.

VI. ICT கொள்கைக்கு ஏற்ப ஃபயர்வால்(**Firewall**) சூழல்களை ஆதரித்தல் மற்றும் நிர்வகித்தல்.

VII. பல்வேறு பிரிவுகளின் அமைப்புத் தேவைகளைத் தீர்மானித்தல் மற்றும் ஒத்துழைத்தல்.

VIII. உயர்நிலை தயாரிப்பு விவரக்குறிப்புகள் மற்றும் வடிவமைப்பு ஆவணங்களை உருவாக்குதல்.

IX. ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு செய்து டிஜிட்டல் மாற்றத்திற்கான மென்பொருள், வன்பொருள் மற்றும் உட்கட்டமைப்புத் தேவைகளை அடையாளம் காணல்.

X. தரவுத்தளங்கள், மூலக் குறியீடு(Source Code) மற்றும் அதன் காப்புப்பிரதிகளின் பதிவுகளை பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட முறையில் சேமித்து, செட் கவர்னஸுடன் தொகுத்தல்.

XI. தொழில்துறை நிலையான கருவிகள் மற்றும் தளங்களின் உதவியுடன் தரவைக் காட்சிப்படுத்த BI தீர்வுகளை உருவாக்குதல்.

XII. கணினி வலையமைப்பு மற்றும் அமைப்பு மென்பொருள், செயலி மென்பொருள், வன்பொருள் மற்றும் உள்ளமைவுகள் உள்ளிட்ட தொடர்புடைய கணினிசார் சூழல்களை பராமரித்து நிர்வகித்தல்.

XIII. OS மற்றும் பயன்பாடுகளில் உதவி மேசை ஒத்துழைப்பை வழங்குதல்.

XIV. வன்பொருள், மென்பொருள் மற்றும் பிற வலையமைப்பு மற்றும் கணினி பிரச்சினைகள்/சிக்கல்களை சரிசெய்தல், கண்டறிதல் மற்றும் தீர்க்கத்தல். தேவைப்படும் போது தவறான வலையமைப்பு மற்றும் வன்பொருள் கூறுகளை மாற்றுதல்.

## 2. கல்வி / தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம்

**கல்வி மற்றும் தொழில் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் 1 அல்லது 2 ஆம் வகுப்பு இளங்கலை (விசேட) பட்டம்.

- அல்லது -

தகவல் தொழில்நுட்பத் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனத்தின் கார்ப்பரேட்/அசோசியேட் உறுப்பினர்

மற்றும்

**<u>அனுபவம்</u>**

தகவல் தொழில்நுட்பத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பிந்தைய தகுதி அனுபவம்

- அல்லது -

அகில இலங்கை சேவையொன்றில் உத்தியோகத்தராக குறைந்தபட்சம் 3 வருட திருப்திகரமான சேவை அனுபவம்.

மற்றும்

**<u>ஏனைய கட்டாய தகைமைகள்</u>**

அனைத்து தகுதியான பயன்பாடுகள், தரவுத்தள முகாமைத்துவம் மற்றும் நியம மென்பொருள் தொகுப்புகள் பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழில் சிறந்த தகவல் தொடர்புத் திறன் (எழுத்து மற்றும் பேச்சு).

**4. ஆட்சேர்ப்பு நடைமுறை**

போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சையில் சித்திபெற ஒவ்வொரு வினாத்தாளிலிருந்தும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். போட்டித் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

**<u>எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடங்கள்</u>**

01. பொது நுண்ணறிவு - 1 மணித்தியால வினாப்பத்திரம்

02. விடய அறிவு
(பதவிக்குரிய) - 2 மணித்தியால வினாப்பத்திரம்

03. முகாமைத்துவ திறன்கள் - 2 மணித்தியால வினாப்பத்திரம்

**5. வயதெல்லை**

22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை ஏற்புடையதன்று.

**6.சம்பளம்**

இப்பதவிக்கான அடிப்படைச் சம்பளம் ரூ. 93,840.00

**7. நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பிக்கும் முறை**

I. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்ட தேவையான தகுதிகளை பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே அவர்கள் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்.

II. ஆட்சேர்ப்பின் அனைத்து அல்லது ஒரு பகுதியை ஒத்திவைப்பதற்கு / இரத்துசெய்வதற்கு தீர்மானிக்கும் உரிமையை TRCSL கொண்டுள்ளது.

III. தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் கல்வி, தொழில்சார் தகுதிகள் மற்றும் வேலை அனுபவ விபரங்களின் சான்றிதழ்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலே தரப்பட்டுள்ள இணைப்பில் இருந்து விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

IV. விண்ணப்பங்கள் தெளிவாக இருத்தல் வேண்டும் அத்தோடு உரிய தேவைகளை உறுதிப்படுத்தாத விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

V. எத்தகைய உதவி தேடல்களும் தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

அனைத்து விண்ணப்பங்களும் 2024...... ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர் / நிர்வாகம் மற்றும் நிறுவன விவகாரங்கள், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பணிப்பாளர்/நி ர்வாகம் மற்றும் நிறுவன விவகாரங்களின் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். விண்பங்கள் அனுப்பப்படும் உறையின் மேல் இடது மூலையில் “உதவிப் பணிப்பாளர் /தகவல் தொழில்நுட்ப பதவிக்கான விண்ணப்பம்” எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

## உதவிப் பணிப்பாளர் / தகவல் தொழில்நுட்பம் பதவிக்கான விண்ணப்பம் - TRCSL

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்):...........................................................................................................
2. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :.......................................................................................................
3. முழுப்பெயர் (தமிழில்) :.......................................................................................................
4. பிறந்த திகதி :..........................................................................................
5. நிரந்தர முகவரி :.........................................................................................................................
6. தொலைபேசி இல. :.................................... மின்னஞ்சல் :...........................................................................
7. கல்வித் தகைமைகள்:

   ...................................................................................................................................
   ...................................................................................................................................
   ...................................................................................................................................

8. தொழிற் தகைமைகள்:
   ...................................................................................................................................
   ...................................................................................................................................
   ...................................................................................................................................

9. ஏனைய தகைமைகள்:
   ...................................................................................................................................
   ...................................................................................................................................
   ...................................................................................................................................

10. அனுபவம்:
    ...................................................................................................................................
    ...................................................................................................................................
    ...................................................................................................................................

11. இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் விபரம்:
    I. ..........................................................................................
    II. ..........................................................................................
    III. ..........................................................................................
    IV. ..........................................................................................
    V. ..........................................................................................

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மை மற்றும் சரியானவை என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன். இந்த விண்ணப்பத்தில் உள்ள ஏதேனும் விபரங்கள் தவறானவை அல்லது பொய்யானவை என தெரிவு செய்வதற்கு முன் கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், அத்தகைய தகவல்கள் தவறானவை அல்லது பொய்யானவை என தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால் எந்தவித இழப்பீடும் இன்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அனைத்து விதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

.......................... ..............................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல் (அரசாங்க நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு)**

திரு/திருமதி/செல்வி........................................................................................................ இந்த அமைச்சில் / திணைக்களத்தில் / நிறுவனத்தில் ............................................ பதவியில் பணிபுரிகின்றார். அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாக உள்ளது. அவருக்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கபடப்டவில்லை மற்றும் எதிர்காலத்தில் அவ்வாறு மேற்கொள்வதற்கு எந்த தீர்மானமும் இல்லை. அவர் இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால், அவரை இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது.

திகதி................................ ..........................................

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்: ..........................................................................................................................................................

பதவி:- ..........................................................................................................................................................

அமைச்சு / திணைக்களம் / நிறுவனம்:-.........................................................................................................

பதவி முத்திரை :